10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

குரல் 01 அதிர்வு 58 வியாழக்கிழமை ஜூலை 06 2017 ethirolimedia@gm



## பம்பலடிப்போம் பாட்டுப்பாடுவோம்

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வு குறுகிய நேரமே நடைபெற்ற நிலையில் “ஃபனி கவுன்சில்” (funny council) என குறிப்பிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன் பொழுது போக்குக்காக இரண்டு பாடலாவது பாடிவிட்டு செல்வோம் என நக்கலாக கூறினார். இதனால் சபை சில நிமிடங்கள் சிரிப்பொலியால் நிறைந்தது. வடக்கு மாகாணசபை அமர்வு இன்று 9.45 மணிக்கு ஆரம்பமாகியது. சுமார் 30 நிமிடங்களின் பின் 10.15 மணியளவில் சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதாக அவைத்தலைவர் அறிவித்தார். அதன்போதே உறுப்பினர் சயந்தன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (உ-1)

## இதுவரை என்ன செய்தோம்? மாகாணசபையில் விவாதம்

வட மாகாண சபையின் மூன்றரை ஆண்டுகால செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கான அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் என அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித் துள்ளார். இன்று நடைபெற்ற வட மாகாண சபையின் 98 ஆம் அமர்விலேயே அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில், வட மாகாண சபையின் மூன்றரை வருடகால செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான திகதியை ஒதுக்கித் தரு மாறு மாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் மற்றும் எதிர்க்கட்சி தலை வர் சி.தவராசா ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். குறித்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வடமாகாண சபையின் மூன்றரை வருட செயற்பாடு தொடர்பாக ஆராயலாம். அது ஒரு நாளாகவோ அல்லது 3 நாட்களா கவோ இருக்கும் என்றார் அவர். (எ-01)

# தூக்கி எறிவேன்



ரணில் ஆவேசம்

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இன மற்றும் அடிப்படைவாதங்களை தூண்டிவிடும் செயற்பாடுகளுக்காக ஆதரவளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, “இவ்வாறான செயற்பாடுகளை தூண்டிவிட்டு செயற்படுபவர்கள் இறுதியில் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறியப்படுவார்கள் என்பதே வரலாற்றுச் சான்றாகும்” என்றும் சுட்டிக்காட்டினார். கடந்த ஆட்சியின் போது இன மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகள், அனுசரணையுடன் இடம்பெற்றிருந்தன. எனினும், தற்போது அவ்வாறான அனுசரணை எதுவும் வழங்கப்படுவதில்லை. இதுவே, இங்குள்ள வித்தியாசமாகும் என்றும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற, பிரதமரிடம் கேளுங்கள் நேரத் தின் போது, ஐக்கிய தேசியக் 06

## இலங்கையிலேயே மிகப்பெரிய மாற்று மின்சக்தி நிலையம் பூநகரியில்!



இலங்கையின் மிகப்பெரிய மாற்று சக்தி மின் நிலையத்தை அமைப்பதற் கான திட்டம் இன்று பூநகரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தை இன்று காலை ஒன்பது மணியளவில், மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மண்ணித்தலை தேவாலயத்தில் ஆரம் பித்து வைத்தார். காற்று, சூரிய ஒளி ஆகியவற்றை கொண்டு மாற்று மின்சக்தி நிலையங்கள் பூநகரியில் உருவாக்கப்பட வுள்ளன என்றுகூறப்படுகின்றது. (ஆ)

## பிரேரணை இல்லை

வட மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசார ணைகளுக்கு தெரிவுக்குழு அமைக்கப் பட வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடமாகாண மீன்பிடி அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் மீது விசாரணை நடத்தப்படும் என முதலமைச்சர் சீ.வி.விக் னேஸ்வரன் கூறியிருந்தார். இந்நிலையில் விசாரணைக் குழு வேண்டாம், தெரிவுக் குழுவே அமைக்கப்பட வேண்டும் என கோரும் பிரேரணையை மாகாண சபை உறுப்பினர் ஆ.பரஞ்சோதி இன்று நடைபெற்ற 98ஆம் அமர்வில் சமர்ப்பிக்க இருந்தார். இந்த நிலையில் குறித்த பிரேரணை ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.


மேற்படி பிரேரணையில் திருத்தங் கள் செய்யப்படவுள்ளதால் பிரேரணை எதிர்வரும் 27ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றார். (எ-01)

அமர்வு ஒன்றரை மணித்தியாலம்

## 5 செலவோ லட்சம்

வடக்கு மாகாணசபையில் ஒரு நாள் அமர்வுக்கான செலவு 5 இலட்சம் ரூபா என கூறப்படுகின்றது. பெரும்பாலும் வடக்கு மாகாணசபையில் தேவையற்ற விடயங்களுக் காக நேரத்தை வீணடித்து உறுப்பினர்கள் வீண் விவாதம் நடத்துவதாக மக்களால் குற்றஞ்சாட் டப்பட்டு வந்திருக்கின்றது. இந்த நிலையில் இன்று நடைபெற்ற 98 ஆவது அமர்வு முற் பகல் 9.45 இற்கு ஆரம்பமாகியது. அரை மணித்தியாலங்களின் பின் 10.15 இற்கு சபை நடவடிக்கைகளை முடிவுறுத்துவதாக அவைத்தலைவர் அறிவித்தார். அதன் பின் 45 நிமிடங்களாக 21 ஆம் திகதிய அமர்வு குறித்து உறுப்பினர்கள் தங்களுக்கு ள் 06

## கரும்புலிகளுக்கு நினைவேந்தல்



கரும்புலிகள் தினமான நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகத்தில் (அறிவகம்) நினை வேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இதில் பொதுமக்களும் கலந்துகொண்டு நினைவேந்தினர்.

## அரசியல் குழப்பம்

### மகாநாயக்கர்களைச் சந்திக்கிறார் மைத்திரி



புதிய அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்களுக்கு மகா நாயக்க தேரர்கள் திடீர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதனால் நாட்டில் அரசியலமைப்பு முன்னகர்வுகளில் குழப்ப நிலைகள் ஏற்பட் டுள்ளது. இந்நிலையில் இவை தொடர்பில் மகா நாயாகக்கர்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் 06

## பசுபதிப்பிள்ளை சொன்ன கதை

நகைச்சுவை கலந்த தத்துவப் பாடல்களினூடாகவும் நீதிக் கதைகள் ஊடாகவும் பிறரைத் தாக்குவதில் கைதேர்ந்தவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாணசபை உறுப் பினர் பசுபதிப்பிள்ளை. அவர் இன்றைய அமர்வில் எழுந்து தான் ஒரு கதை சொல்லப் போவதாக கூறினார். சிரிப்பொலியின் பின் சபையும் அனும தித்தது. அவர் கூறிய கதை இதுதான்,

முக்காலமும் அறிந்த முனிவரிடம் கையினுள் புறா ஒன்றனைக் கொண்டு ஒருவன் சென்றுள்ளான். முனிவரே நீங்கள் முக்காலமும் அறிந்தவர். நான் கையினுள் பொத்தி வைத்திருக்கும் புறா உயிரோடு உள்ளதா? 06

# உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சில தரப்பினர் இந்தத் தேர்தல் குறித்து மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

"ஆனால், அந்தக் கருத்துக்கள் யாவும் உண்மைக்கு புறம்பானவை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தை முன்னிறுத்தி சில அரசியல் கட்சிகள் மேடைகளில் பிழையான கருத்துக்களை மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகின்றன. இத்தகைய முரண்பட்ட கருத்துக்களை பொதுமக்கள் நம்பி ஏமாற மாட்டார்கள்" என்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (உ)

# குப்பை கொட்டிய 112 பேர் கைது

அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் குப்பைகளை கொட்டிய 112 பேர் இரண்டு நாட்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 02ம் மற்றும் 03ம் திகதிகளில் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. அதன்படி கொழும்பு மாவட்டத்தில் 47 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 63 பேரும், களுத்துறை மாவட்டத்தில் இரண்டு பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களுக்கு எதிராக உரிய பொலிஸ் நிலையங்கள் ஊடாக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. (உ)

# விபத்தில் இளைஞன் பலி

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு புளியடிப்பாலம் அருகே, அறுவடை இயந்திரத்தை ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியுள்ளது. இதன்போது, மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மண்டூரைச் சேர்ந்த தங்கதுரை வயது (38) என்பவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸார் உழவு இயந்திரத்தின் சாரதியைக் கைதுசெய்துள்ளதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (உ)

**மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்**

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# கிட்டுவுக்கும் காந்திக்கும் இலக்கு ஒன்றேதான்!

"மகாத்மாக்களின் அகிம்சை மொழியை சிங்களப் பேரினவாதிகள் புரிந்து கொள்ளவில்லை. புரிந்த கொள்ள மறுத்தார்கள். இதனால்தான் ஆயுதப் போராட்டம் கருக்கொண்டது. 'கிட்டுகள்' தோன்றி வேறுமொழியில் பேசத் தொடங்கினார்கள்." என்று வடமாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

சாவற்கட்டு மகாத்மா மைதானத்தில் நேற்று நடைபெற்ற மகாத்மா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கிட்டு முன்பள்ளி என்ற பெயரே இராணுவத்தின் நெருக்குதல் காரணமாக மகாத்மா முன்பள்ளி என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியின் இலக்கும் கிட்டுவின் இலக்கும் ஒன்றுதான். அவரவர் தேசங்களின் விடுதலையே அவர்களின் இலட்சியங்களாக இருந்தது. ஆனால், இருவரும் தங்கள் இலட்சியங்களை அடைவதற்காக ஆட்சியாளர்களுடன் பேசிய மொழி வேறுவேறானது.



தமிழ்மக்களிடையே ஆயுதப் போராட்டம் முளை விட்டதற்கான காரணங்கள் இன்னமும் அப்படியே உள்ளன. அரசாங்கம் இடதுகையில் தூக்கிய கத்தியைத் தனது முதுகுக்குப் பின்னால் மறைத்து வைத்துக் கொண்டே இனி சமாதானம் என்று சொல்லி வலது கையால் எங்களுடன் கைகுலுக்கப் பார்க்கிறது. இதுபற்றி விழிப்புணர்வு எங்களுக்கு இல்லாவிடில் நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவோம். ஆயுதங்களை நாம் மீளவும் தூக்க வேண்டாம். ஆனால், ஆயுதப் போராட்டம் நடைபெற்றதற்கான காரணங்களை ஆயுதப் போராட்டத்தின் அளப்பரிய தியாகங்களை யாரும் மறந்துவிடக் கூடாது. எமது இளைய தலைமுறையினரிடம் இவை எடுத்துச் சொல்லப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# மாகாண மட்ட பாடசாலை விளையாட்டு: முல்லை மாணவிகள் சாதனை



மாகாணமட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 2017 ஆம் ஆண்டுக்கான பளு தூக்கும் போட்டியில் முல்லைத்தீவு, பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் ஐந்து தங்க பதக்கங்கள், இரண்டு வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை பெற்று இரண்டாம் நிலைக்கு தெரிவாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் காணப்படுகின்றது.

குறித்த போட்டிகளில் 16 வயதுப் பிரிவில் ப.டர்சனா, தே.தர்சிகா ஆகியோர் முதலாம் இடத்தினையும், அ.ஸ்ரன்சிகா 2 ஆம் இடத்தினையும், இ.ஜீவிதா, சி.மேனகா ஆகியோர் 3ஆம் இடத்தினையும் மற்றும் கா.லுகேந்தினி 4 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும், 18 வயதுப் பிரிவில் ர.லக்சனா, ஞா.நிருசா ஆகியோர் முதலாம் இடத்தினையும், 20 வயதுப் பிரிவில் ஜெ.நிதுசா 2ஆம் இடத்தினையும், ம.கஜனி முதலாம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# சட்டவிரோத சிகரட் 50 ஆயிரம் ரூபா தண்டம்

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குவைத்திலிருந்து வருகை தந்த இளைஞர் இவற்றை நாட்டுக்கு கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இன்று காலை 3.30 மணியளவில் குவைத் எயார்வேஸ் கே.யூ 361 என்ற விமானத்தில் சந்தேகநபர் வருகை தந்துள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 50,000 ரூபா தண்டம் செலுத்தியதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாக பிரதி சங்கப் பணிப்பாளர் எம். ஆர் சந்தன விஜேசேகர கூறினார். கைப்பற்றப்பட்ட சிகரட்டுக்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. (உ)

# நாளை மின் தடை

மின்மார்க்கங்களில் நடைபெறும் திருத்த வேலைகள் காரணமாக நாளை வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

கம்பர்மலை, கொத்தாண்டார் குளம், கோவில்வயல், மல்வில், முகாவில்.

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி கொள்ள முடியாது



தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாது என பிரபல அரசியல் விமர்சகர் கெவிந்து குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். 'மாற்றம் சுகமா' என்ற தொனிப் பொருளில் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஐந்து இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜே.வி.பி.யின் அனுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரண்டு தீர்மானங்களும் மிகவும் ஆபத்தான தீர்மானங்களாகும். இதன் மூலம் ஐம்பது இலட்சம் வாக்காளர்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளனர்" எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (உ)

# தமிழ்ப்பட்டயக்கற்கை நெறி விண்ணப்பம்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஒரு வருடகால தமிழ்ப்பட்டயக்கற்கை நெறி ஒன்றினை நடத்தி வருகின்றது. விரிவுரைகள் வார இறுதி நாட்களில் காலை 9மணி முதல் மாலை 4மணி வரை நடைபெறும். இலவசமாக நடைபெறும் இக் கற்கை நெறிக்கு பதிவுக்கட்டணமாக 1000 ரூபா அறவிடப்படவுள்ளது.

பாடநெறியில் சேர்ந்து பயில விரும்புவோர், பொதுச்செயலாளர், இல7, சங்கம் வீதி, கொழும்பு 06. என்ற முகவரிக்கோ அல்லது 011 2363759 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்புகொள்ள முடியும்.

amilsangamcolombo@yahoo.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் விண்ணப்பங்களைப் பெற்று அனுப்ப முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை 05.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (உ)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி



தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com

# பாவனா கடத்தலில் திலீப்புக்கு தொடர்பு?

நடிகை பாவனாவின் திருமணத்தை நிறுத்தவே அவரைக் கடத்தி, பாலியல் தொல்லைகொடுக்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.
தமிழ், மலையாளம் உள்ளிட்ட தென்னிந்திய திரைப்படத்துறையில் முன்னணி நடிகையாக இருப்பவர் பாவனா. இவர் கடந்த பெப்ரவரி மாதம், இரவுப் படப்பிடிப்பு ஒன்றை முடித்து விட்டு திரும்பியபோது மர்ம நபர்களால் கடத்தப்பட்டு, காரிலேயே பாலியல் தொல்லைக்கு உள்ளானார்.
கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பாக பல்சர் சுனி என்ற சுனில்குமார் உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.
இவர்கள் பாவனாவை பாலியல் துன்புறுத்தல் செய்தபோது அதனை செல்போனில் பதிவு செய்துள்ளனர்.
பாவனாவுக்கும், பிரபல சினிமாத் தயாரிப்பாளர் நவீனுக்கும் இடையில் நடக்கவிருந்த திருமணத்தைக் குழப்பவே இவ்வாறு பாவனா கடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. பாவனாவின் கடத்தல் விவகாரத்தில் மலையாள முன்னணி நடிகர் திலீப், அவரது மனைவியும் நடிகையுமான காவ்யா மாதவன் ஆகியோரும் தொடர்புபட்டுள்ளதாக ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. (இ)

# ட்ரம்பின் அறையில் மோடி



உலகின் பாதுகாப்பான பகுதியாகக் கருதப்படும் ஜெருசலேம் நகரின் கிங் தாவீத் ஹோட்டலில் இந்தியப் பிரதமர் மோடியை இஸ்ரேல் அரசு தங்க வைத்துள்ளது.
இந்தியா-இஸ்ரேல் இடையிலான தூதரக உறவின் 25 ஆண்டுகள் நிறைவையொட்டி, இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேல் சென்றுள்ளார்.
இதன்மூலம் இஸ்ரேல் சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையையும் மோடி பெற்றுள்ளார். இஸ்ரேலில் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மோடி, பழைய ஜெருசலேம் நகரின் கிங் தாவீத் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் 3 வாரங்களுக்கு முன்னர் தங்கியிருந்த அதே அறை, இந்தியப் பிரதமர் மோடிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

# இதுதான் பரிசு!

“ஆயுதச் சோதனை பேச்சுவார்த்தைக்கு வட கொரியா ஒருபோதும் உடன்படாது” என அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அமெரிக்கச் சுதந்திர தினத்தன்று கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணையைப் பரிசோதனை செய்த வட கொரியா, உலகின் எந்தப் பகுதியையும் தாக்க தங்களால் முடியும் என்பதை உலகுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.
குறித்த ஏவுகணைச் சோதனைக்குப் பின்னர் பேசிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், “இந்த ஏவுகணை சோதனை, அமெரிக்கர்களுக்குச் சுதந்திரதினப் பரிசு. வட கொரியா தனது துணிச்சலை அமெரிக்காவுக்குக் காட்டும். ஆயுதச் சோதனை குறித்த பேச்சுவார்த்தைக்கு ஒருபோதும் உடன்படாது” என்றார். (இ)

# ஜெ. மரணத்தில் சந்தேகம்

## விசாரணை ஒத்திவைப்பு

ஜெயலலிதா மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடத்தக்கோரி தொடரப்பட்ட வழக்குகள் மீதான விசாரணை ஜூலை 7 ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.
மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை தேவை என மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
இந்த வழக்குகள்மீதான விசாரணை தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி மற்றும் நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் அடங்கிய முதல் அமர்வில் நேற்று நடைபெறவிருந்தது.
ஆனால் மனுதாரர்களில் ஒருவரான ஜோசப் தரப்பின் வழக்கறிஞர் வராததால் வழக்கினைத் தள்ளி வைக்க வேண்டுமென நீதிபதிகளிடம் கோரப்பட்டது.
இதையடுத்து இந்த வழக்குகளை நீதிபதிகள், ஜூலை 7 ஆம் திகதி விசாரிப்பதாகத் தெரிவித்தனர். (இ)

# லொறி மோதிய பயங்கரம் 78 பேர் நசுங்கி உயிரிழப்பு



மத்திய ஆப்பிரிக்க குடியரசு நாட்டில் உள்ள பம்பரி மற்றும் இப்பி பகுதிகளுக்கு இடையே நிகழ்ந்த சாலை விபத்தில் 78 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
உயிரிழந்த 60 பேரின் உடல்கள் பம்பரியில் உள்ள மருத்துவமனையில் உள்ள பிணவறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. 18 பேரின் உடல்களை, உறவினர்கள் வந்து பெற்று சென்றதாகவும் மருத்துவமனை நிர்வாகி மைக்கேல் சாகான்ஜி தெரிவித்துள்ளார்.
மேலும் இந்த விபத்தில் படுகாயமடைந்த 60க்கும் மேற்பட்டோர் அங்குள்ள பிரபல மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், மாலோம் பகுதியில் உள்ள சந்தையில் பொருள் வாங்கச் சென்ற மக்கள் மீது 10 சக்கரங்களை கொண்ட சரக்கு ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என தெரிய வந்துள்ளது.லொறியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (இ)

# ஓகஸ்ட் 25 தீர்ப்பு நாள்

முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் ஆ.ராசா மற்றும் திமுக எம்.பி. கனிமொழி உள்ளிட்டோருக்கு எதிரான, 2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் ஓகஸ்ட் 25 ஆம் திகதி தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது 2ஜி அலைக் கற்றை ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது.
இதையடுத்து, டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் ராசா, கனிமொழி உள்ளிட்ட 14 பேர் மற்றும் 3 தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.
இந்த வழக்கில் இறுதி வாதம் நிறைவு பெற்றுள்ள நிலையில் இம்மாதம் தீர்ப்பு வெளியாகும் எனக் கூறப்பட்டது.
இந்நிலையில் சிறப்பு நீதிபதி ஓ.பி. சைனி இந்த வழக்கு குறித்து நேற்று தெரிவித்தபோது, “வழக்கில் ஏராளமான ஆவணங்கள் மற்றும் கோப்புகளை தொடர்ந்து பரிசீலிக்க வேண்டியுள்ளது. இதற்குப் போதிய கால அவகாசம் தேவை” என்றார்.
வழக்கின் விசாரணை ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்றைய தினம் தீர்ப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# எரிவாயுக் குழாய் கொன்றது ஐவரை!

சீனாவில் எதிர்பாராத வகையில் எரிவாயுக் குழாய்ஒன்றில் கசிவு ஏற்பட்டு, அது வெடித்து சிதறியதில் 5 பேர்சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 89 பேர் பலத்த காயம் அடைந்தனர்.
விபத்துப் பற்றிய தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன.
மீட்புபடையினரும் விரைந்து சென்றனர். அவர்கள் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டு படுகாயம்அடைந்த நபர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (இ)

# மீண்டும் காதலர் விடுதிகள்



கியூபாவில் காதலர்களுக்கெனப் பிரத்தியேகமாக இயங்கும் காதலர் விடுதியை மீண்டும் தொடங்க உள்ளதாக கியூபாவின் தலைநகரான ஹவானாவில் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தக் காதல் விடுதியில் குறித்த மணித்தியாலங்களுக்கு இவ்வளவு வாடகை என்ற வரையறை உள்ளது.
மேலும் இந்த விடுதிகளில் பணத்திற்கு ஏற்ப வசதிகளும் செய்யப்படுகின்றன.
போதிய பணவசதி இல்லாத காதலர்கள் கடற்கரை, பூங்கா உள்ளிட்ட பகுதிகளையும் ஆக்கிரமிப்பதால், செல்வந்தக் காதலர்களுக்கு இந்தக் காதல் விடுதிகள் பயனுள்ளவையாக அமையும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கியூபாவில் 1960 ஆம் ஆண்டில் இருந்தே தலைநகர் ஹவானாவில் காதலர் விடுதிகள் செயற்பட்டு வந்துள்ளன.
பின்னர்1990 களில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் புயல் காரணமாக இந்த விடுதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளாக மாற்றப்பட்டன. (இ)

# ஒப்புக்கொள்ள முடியாது

“ஐக்கிய நாடுகள் சபைக்கான சீனப் பிரதிநிதி லியூ ஜியேயி, வட கொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை ‘வெளிப்படையாக மீறக்கூடியவை’. அதனால் ஒப்புக்கொள்ள முடியாதது” என்று கூறியுள்ளார்.
வடகொரியா கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளை வெற்றிகரமாக பரிசோதித்தமை தொடர்பான விவாதம் ஐ.நா. சபையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
“இந்த விஷயத்தில் தொடர்புடையவர்களைப் பொறுமை காக்கும்படி சீனா கேட்டுக் கொள்கிறது. எத்தகைய தூண்டுதல் செயல்களிலும் ஈடுபட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.
நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கும், பதற்றத்தை தணிக்கவும் பணியாற்ற வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.அத்துடன் தென் கொரியாவில் அமெரிக்கா ஏவுகணைகளை நிறுத்துவதையும் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.
இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய ரஷ்யப் பிரதிநிதி “வடகொரியா மீது மேலும் தடைகளை விதிப்பதும், இராணுவ ரீதியில் நடவடிக்கை எடுப்பதும் அனுமதிக்கத்தக்கதல்ல” என்றும் கூறினார்.(இ)

# பெங்காசி ஹப்தார் வசம்



லிபியாவின் கிழக்கு படைத் தலைவரான காலிஃபா ஹஃப்தார், போரில் வென்று தமது போராளிகள் பெங்காசி நகரைக் கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ளார். கடாஃபியின் படையில் பணியாற்றியவர் ஹஃப்தார். பெங்காசியை விடுவிக்க மூன்றாண்டுகளுக்கு முன்பு அவர் “கண்ணிய போர்முனை’ என்ற பெயரில் போராட்டத்தை ஆரம்பித்தார். பெங்காசியை அடுத்து ஹஃப்தாரின் போராளிகள், லிபியாவின் தலைநகரான திரிபோலியை நோக்கி நகருவர் என்று தெரிகிறது. லிபியாவின் தலைநகரில் இருக்கும் ஐ.நா அங்கீகாரம் பெற்ற அரசு மீது ஹஃப்தார் போர் தொடுப்பார் என்றே கருதப்படுகிறது. அங்குள்ள அரசை அவர் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் அரசு என்றே கூறி வருகிறார்.எனினும் பெங்காசியை இழந்த படைகள் கொரில்லாத் தாக்குதல் முறையில் ஹஃப்தாரின் படைகளுடன் சண்டையிடும் வாய்ப்பும் உண்டு. (இ)

## நவிண்டில் கலைமதியின் உதைபந்தாட்டம்:

# யாழ். பல்கலைக் கழகத்தை வீழ்த்தி வெற்றியைத் தனதாக்கியது டயமன்ஸ்



நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று இமையாணன் மத்திய விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளை யாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட் டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ். பல்கலைக் கழகத்தை எதிர்த்துக் களமிறங்கியது.

ஆரம்பம் முதல் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்ட டயமன்ஸ் அணி, அதை சிறப்பாகச் செய்தும் முடித்தது.

பல்கலைக்கழக அணி மேற்கொண்ட கோல் அடிக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியதுடன், தமது கோல் அடிக்கும் முயற்சிகளில் வெற்றியும் பெற்றது.

ஆட்டத்தின் இறுதியில் டயமன்ஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்து சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

# சென். மைக்கல் தொடரில் குறிஞ்சிக்குமரன் அபாரம்



உரும்பிராய் சென். மைக்கல் விளை யாட்டுக் கழகம் நடத்தி வரும் உதை பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் கோல் மழை பொழிந்து பெரு வெற்றிபெற்றது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட் டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம், யாழ். பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் களமிறங்கியது.

இந்த ஆட்டத்தில் முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்திய குறிஞ்சிக் குமரன் அணி, கோல் மழை பொழிந்தது. இத்தகைய அதிரடித் தாக்குதலுக்கு மத்தியிலும் பாரதி விளையாட்டுக்கழகம் பெரும் முயற்சி எடுத்து கோல் ஒன்றைப் போட்ட போதும், அந்த அணியால் குறிஞ்சிக் குமரனின் அதிரடியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆட்ட நேர முடிவின்போது குறிஞ்சிக் குமரன் அணி, 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டு அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. குறிஞ்சிக் குமரன் அணி சார்பாக கஜமுகன் 8 மற்றும் 28ஆவது நிமிடங்களிலும், குருபரன் 16 ஆவது நிமி டத்திலும், கஜநாதன் 39 ஆவது நிமிடத்தி லும் கோல்களைப் போட்டனர். (ஐ)

# இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆவரங்கால் மத்தி இந்து இளைஞருடன் இறுதியில் இன்று மோதல்

அரியாலை சனசமூக நிலையம் நடத்தி வரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

நேற்று இரவு இரு போட்டிகள் நடை பெற்றன. இதில் முதலில் நடைபெற்ற காலி றுதிப் போட்டியில் அச்சுவேலி யூத் விளை யாட்டுக் கழகம் 2:1 என்ற சுற்றுக் கணக்கில் அச்சுவேலி ஸ்டார் விளையாட்டுக் கழக த்தை வென்றது.

இதில் வெற்றிபெற்ற அச்சுவேலி யூத் விளையாட்டுக் கழகம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்துடன் அரையிறுதி யில் மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட் டிக்கு முன்னேறியது.

இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் இறுதிப்போட்டியில் மத்திய விளையாட் டுக் கழகம் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோத வுள்ளது. (ஐ-50)

## இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண் டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் முதலாவது போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் சிகுமரன் அணியை எதிர்த்து வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பின்னர் 8.30 மணிக்கு ஆரம்பிக் கும் இரண்டாவது ஆட்டத்தில் பாசை யூர் சென். அன்ரனிஸ் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து கொற்றா வத்தை றேஞ்சஸ் அணி மோதும். (ஐ)

## இலங்கையை வீழ்த்தியது இந்தியா



இங்கிலாந்தில் நடை பெற்று வரும் பெண்கள் உலகக் கிண்ணக் கிரிக் கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றில் இலங்கை அணியை 16 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வீழ்த்தி இந்திய அணி 4ஆவது வெற்றியைப் பதிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி, 50 ஓவர்கள் முடிவில் 8 விக் கெட்டுகளை இழந்து 232 ஓட்டங்களைக் குவித் தது.

பின்னர் களமிறங்கிய இலங்கை அணி, 50 ஓவர் கள் முடிவில் 7 விக்கெட் டுகளை இழந்து 216 ஓட் டங்களை மாத்திரமே பெற்று தோல்வியுற்றது.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் இலங்கை அணியின் அரையிறுதி வாய்ப்பு மங்கியுள்ளது. (ஐ)

# ஹொலிவுட்டில் ரஹ்மான் தங்கை



இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் தங்கை ஹொலிவுட் படம் ஒன் றுக்கு இசையமைத்துப் பாடியிருக்கிறார்.

ஏ.ஆர்.ரகுமானுக்கு 3 சகோதரிகள், மூத்தவர் ரைஹைனா. இவரது மகன்தான் இசை அமைப் பாளர் ஜி.வி.பிரகாஷ். இன்னொருவர் பாத்திமா. கடைக்குட்டி இஷ்ரத் காதரி.

இவர் சமீபத்தில் ஹொலிவுட் படம் ஒன் றுக்கு இசைமைத்து, பாடி யிருக்கிறார். இலங்கைத் தமிழரான ராஜூதிருச் செல்வன் அந்தப் படத்தை இயக்கி இருக்கிறார். (ஒ)

# மீண்டும் இணையும் பிரபாஸ்-அனுஷ்கா

பாகுபலி என்ற பிர மாண்டப் படம் மூலம் புகழின் உச்சிக்குச் சென் றவர் பிரபாஸ். இப்படத் தைத் தொடர்ந்து அவ ருக்கு தமிழ், ஹிந்தி என பல மொழிகளில் பட வாய்ப்புகள் குவிந்த வண் ணம் உள்ளன.

தற்போது பிரபாஸ், சுஜித் இயக்கத்தில் 'சாஹோ' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் நாயகியாக அனுஷ்கா நடிக்கவுள்ளார்.



இந்தப் படத்தில் இணைந்தால் அவர்கள் இருவரும் சேர்ந்து நடிக்கும் ஐந்தாவது படம் இது என்பது குறிப்பிடத் தக்கது. (ஒ)




# மூன்றாவது சுற்றில் முர்ரே, நடால், ஹலெப்

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென் னிஸ் தொடரில் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில் முன்னணி நட்சத் திரங்களான முர்ரே, நடால் மற்றும் சிமோன் ஹலெப் ஆகியோர் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறி யுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையரில் ஸ்பெ யினின் ரபேல் நடாலும் அமெரிக்காவின் டொனால்ட் யங்கும் மோதிய ஆட்டத்தில், நடால் 6-4, 6-2, 7-5 என்ற சுற்றுக் கணக்கில் யங்கை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, 6-3, 6-2, 6-2 என்ற சுற்றுக் கணக்கில் ஜேர்மனியின் பிறவுணை எளிதாக வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இவர்கள் தவிர முன்னணி வீரர்களான குரோஷியாவின் மரின் சிலிச் ஜப்பானின் கே நிஷிகோரி, பிரான்ஸின் சொங்கா ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன் னேறியுள்ளனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரங்கனைகளான ரோமானியாவின் சிமோன் ஹலெப், உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, இங்கிலாந்தின் ஜோனா கோண்டா, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ஸ்லொவோக்கியாவின் டோம்னிகா சிபுல்கோவா ஆகியோர் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்று மூன் றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.


பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தி யாவின் சானியா மிர்ஷா- பெல்ஜியத்தின் பிலிப்கின்ஸ் ஜோடி, சீனாவின் ஷாங்- ஜப்பானின் ஒசாகா ஜோடியை 6-4, 6-3 என்ற சுற்றுக் கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)

# துறைமுக நகரம்: பணிகள் துரிதகதியில்



கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்காக, கடலில் இருந்து நிலத்தை மீட்கின்ற 45 வீத நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சிஎச்சி போர்ட் சிற்றி கொழும்பு நிறுவனத்தின் தலைமை விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரி லியாங் தோ மிங் தெரிவித்துள்ளார். பீஜிங்கில் உள்ள சீன துறைமுக பொறியியல் நிறுவனத்தில், நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். "மூன்று தூர் வாரும் கப்பல்களைக் கொண்டு, நிலப்பரப்பை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலத்தை மீட்கும், நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆரம்ப உட்கட்டமைப்பு வேலைகள் மற்றும் பாதைகள் அமைப்பு வேலைகள் 2020 இல் நிறைவடையும். 2021இல், கடற்கரை, மரினா மற்றும் மத்திய பூங்கா என்பன தொடர்பான பணிகள் நிறைவு செய்யப்படும். அனைத்துலக நிதி நிலையத்தை அமைக்கும் பணிகள் 2020இல் நிறைவடையும். துறைமுக நகர கட்டுமானப் பணிகள் அனைத்தையும், 2016ஆம் ஆண்டு முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




## தீவிரவாத அச்சுறுத்தல் விசாரணைக்கு உத்தரவு



கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு ஐ.எஸ் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் இருப்பதாக வெளியான செய்திகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று ஐதேக உறுப்பினர் முஜிபுர் ரகுமான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். "சிங்கள, முஸ்லிம் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழக் கூடிய சூழலை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அடிப்படைவாதிகள், மக்களைத் தூண்டி விட்டு, இன நல்லிணக்கத்தை சீர்குலைத்து, நாட்டில் உறுதியற்ற நிலையை உருவாக்க முனைகிறார்கள். சில ஊடகங்கள் இனவாதத்தையும், பகைமையையும், மதங்களிடையே வெறுப்புணர்வையும் ஊக்குவித்து வருகின்றன" என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## மாவட்டம் தோறும் அனர்த்த நிவாரண நிலையம்

25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில், ஒரே நேரத்தில் 100க்கும் 200க்கும் இடைப்பட்ட தொகையினரை தங்கவைப்பதற்கு முடியுமான வதிவிட நிலையங்கள் 10 இனை, 2018 - 2020 காலப்பகுதியினுள் நாடு பூராகவும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அனர்த்த நிவாரண நிலையங்களாக குறித்த நிலையம் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில், அக் கட்டடம் மற்றும் வளங்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கு உகந்த செயற்திட்டமொன்றை தயாரிப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை கருத்திற்கொண்டு அமைச்சரவை இச் செயற்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

## தபால் தின கொண்டாட்டங்கள்

2017 ஆண்டுக்கான சர்வதேச தபால் தின கொண்டாட்டங்கள் இம்முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில்ஒ க்டோபர் மாதம் 9ம் திகதி பொலனறுவையில் நடைபெறவுள்ளது. இதற்கொன பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 34 உப தபால் நிலையங்களை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. தபால் திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களினதும் பங்களிப்புடன் பிரதேச மட்டத்தில் இரத்த தான நிகழ்வுகள் மற்றும் சமூக சேவை நிகழ்வுகளை நடத்துவதற்கும், 25,000 தபால் அலுவலகர்களின் சேவையினை மதிப்பிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

## செயல்திறன் அடிப்படையில் 2018 வரவு செலவுத் திட்டம்

2018 வரவு செலவுத் திட்டம் செயல்திறன் அடிப்படையில் தயாரிக்கப்படவுள்ளது. இதற்காக அமைச்சரவைக்கு நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. '2018-2020 மத்திய கால மெக்ரோ நிதிக்கட்டமைப்பானது' பல்வேறு முக்கிய அம்சங்களை கொண்டமைகின்றது. இதன் அடிப்படையில் 2020ம் ஆண்டளவில் பின்வரும் இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாட்டின் வருவாயினை 16.5% ஆக உயர்த்துதல்
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாட்டின் மீள் செலவினை 14.8% க்கு கொண்டுவரல்
3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொது மக்கள் முதலீடு 5.3% ஆக இருக்கும்
4. வரவு செலவு திட்ட பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5% ஆக குறைத்தல்
5. நாட்டின் கடனினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70% ஆக குறைத்தல்

இதனடிப்படையில் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தகவல் அறிதல் செயலமர்வு

தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வடமாகாண சபை பிரதம செயலாளர், மாவட்ட செயலாளர்கள் ,அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தலைமை அதிகாரிகள், பிரதேச செயலாளர்களுக்கான செயலமர்வொன்று நாளை நடைபெறவுள்ளது. நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சும், அரசாங்க தகவல் திணைக்களமும் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்த செயலமர்வுக்கு அமைவாக வடமாகாண ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வும் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நாளை காலை 9 மணிக்கு இந்த செயலமர்வு ஆரம்பமாகவுள்ளது. (உ)

## விக்கி குறித்து கவலைப்படத் தேவையில்லை



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கை தொடர்பான தேவையின்றிக் கவலைப்படக்கூடாது என்று புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.வடக்கில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறாரே என்று, செய்தியாளர் ஒருவர், கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க "வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எனது நல்ல நண்பர். இதுபோன்ற அறிக்கைகள் தொடர்பாகத் தேவையின்றிக் கவலைப்படக் கூடாது. தேவைகளின் அடிப்படையில் தான், படையினரை நிறுத்தும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அரசியல் நோக்கில், ஆயுதப்படைகள் நிறுத்தப்படுவதில்லை" என்றார் அவர். (உ)



## பீடாதிபதிகளுக்கு தெளிவுபடுத்துங்கள்

"புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு 6.2 மில்லியன் மக்கள் தற்போதைய அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதன் முக்கியத்துவத்தை பௌத்த பீடாதிபதிகளுக்கு விளங்கப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்" என்று ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அரசியலமைப்பு மாற்றம் தேவையற்றது என்று பௌத்த பீடாதிபதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "பௌத்த பீடாதிபதிகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து, பௌத்த பிக்குகளின் கருத்தேயாகும். புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு 2015ஆம் ஆண்டு தேர்தலில், 6.2 மில்லியன் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர். முன்னைய அரசாங்கங்களும் பதவிக்கு வர முன்னர், அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கியிருந்தன. ஆனால் அதனை நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் அடிப்படைவாதிகள் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தாமல் தடுப்பதற்கு, புதிய அரசியலமைப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும் அரசின் கடப்பாடு" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## எம்.பி களுக்கு ஒழுக்கக் கோவை



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை தயாரிக்கப்படவுள்ளது.சர்வமதத் தலைவர்களுடன் பாராளுமன்ற வளாகத்தில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் சபாநாயகர் கரு ஜயசூரிய இதனை தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் இதற்கு ஆதரவு அளித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய கூறினார்.விரைவில் இதனை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (உ)

## நாளை நாளும் கோளும்

07.07.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 23ஆம் நாள்

திரயோதசி காலை 6.37 வரை கேட்டை பிற்பகல் 01.02 வரை மரணயோகம்

இராகுகாலம் 10.28-11.58 சுபநேரம் 05.58-07.28 எமகண்டம் 02.58-04.28

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீண்செலவு | உற்சாகம் | பணிவு | சாதனை | இன்பம் | யோகம் | சலிப்பு | தொல்லை | பாசம் | தாமதம் | தெளிவு | உழைப்பு |

# மனைவியைக் கொன்றவர் தற்கொலைக்கு முயற்சி

தம்புத்தேகம - இராஜாங்கன பகுதியில் வயலில் வேலைசெய்துகொண்டிருந்த பெண் ஒருவர், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் கணவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதோடு, அவர் விஷம் அருந்தி தற்கொலைக்கு முயன்றுள்ளதாக, பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும், சம்பவத்தில் பலியானவர் 38 வயதான பெண் எனத் தெரியவந்துள்ளது. இதேவேளை, விஷம் அருந்திய கணவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ)

# மருதனார்மடம் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு



மருதனாமட சந்தைப்பகுதியில் கழிவு நீர் போகும் குழியில் வெடிப்பு ஏற்பட்டு சந்தை முற்பகுதியில் குழியில் இருந்து நீர் வெளியேறுவதனால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் சுகாதாரச் சீர்கேடாகவுள்ளது.

பொறுப்புள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளும் கேட்டுக்கொள்கின்றார்கள். அத்துடன் மலசலகூட வசதியில்லாமல் பொது இடங்களில் சிறுநீர் கழிப்பதனால் கட்டி முடிவடைந்த மலசலகூடத்தினை பாவனைக்கு விடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-11)

# 349 பட்டதாரி ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் 349 வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள், மாகாண பொதுச் சபை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் Recruitment and Exam என்ற பகுதியில் Advertisment என்ற பிரிவுக்குள் சென்று மேலதிக தகவல்களையும் மாதிரி விண்ணப்பத்தையும் பெறமுடியும்.

விண்ணப்பமுடிவுத்திகதி 2017.08.04 என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடங்களும் அவற்றுக்கான வெற்றிடங்களும் வருமாறு-

தமிழ்-61, வரலாறு-40, குடியியல்-39, தகவல் தொழில்நுட்பம்-27, விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் - 57, வழிகாட்டலும் ஆலோசனையும் - 47, இரண்டாம் மொழி (சிங்களம்) - 78. (அ)

# “நானே குற்றவாளி!”
## -ஒத்துக் கொண்டார் பிரதியமைச்சர்



சொத்து விபரங்களை வெளியிடாமல் இருந்ததாக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தன ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே முன்னாள் பிரதியமைச்சர் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து இம்மாதம் 20ஆம் திகதி இவருக்கு தண்டனை விதிக்கப்படும் என, நீதவான் லால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

2005 - 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக செயற்பட்ட சரண குணவர்தன, தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தத் தவறியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.(ஆ)

**தூக்கி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதேவேளை, “அதிகாரத்துக்கு வர முயல்வோரே இனவாதத்துக்கு அர்த்தம் கற்பிக்கப்பார்ப்பதாகக் குறிப்பிட்ட அவர் இனவாதத்தையும் அடிப்படைவாதத்தையும் தூண்டிவிட்டு குறுகிய அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்வதே இவர்களது நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார். (எ)

**5 லட்சம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் நடத்திவிட்டு 11 மணிக்கு தேனீர் அருந்துவதற்காக எழுந்து சென்றனர். அத்தோடு சபை நடவடிக்கைகள் முடிவிற்கு வந்துள்ளது. முக்கிய விடயங்கள் எதுவும் விவாதிக்கப்படாமல் அவை நடவடிக்கைகள் ஒன்றரை மணித்தியாலத்தில் முடிவுறுத்தப்பட்டபோதும் 5 இலட்சம் ரூபா நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-01)

**அரசியல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றினை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று மகா நாயக்க தேரர்களை கண்டியில் சந்திக்க உள்ளார். இன்று மாலை இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் கலந்து கொள்ள உள்ளனர். இதன்போது பௌத்த மதம் மற்றும் பௌத்த விகாரைகள் சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் பேசப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

**பசுபதிப்பிள்ளை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாவிடில் இறந்து விட்டதா எனக் கேட்டான்? புறா உயிருடனிருப்பதை அவதானித்த முனிவர் அவனது கை கட்டைவிரல் புறாவின் தலையை அழுத்திக்கொண்டிருப்பதையும் அவதானித்தார். புறா உயிருடன் உள்ளது எனக் கூறினால் உயிருடன் இருக்கும் புறாவை அவன் கைவிரலால் அழுத்தி கொன்றுவிடுவான். புறா இறந்துவிட்டது எனக் கூறினால் உயிருடன் உள்ள புறாவை பறக்கவிட்டுவிடுவான் என யோசித்த முனிவர், “எல்லாம் உன் கையில் தான் உள்ளது என்று கூறினார்” என்று கதையை முடித்தார் பசுபதிப்பிள்ளை.

பசுபதிப்பிள்ளை சொன்ன கதையைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட சயந்தன் எழுந்து “நல்ல கதை சொன்ன நந்தவனத்து ஆண்டிக்கு நன்றி” என்றார். (எ-1)

K-AIMS BUSINESS SCHOOL

முற்றிலும் மாறுபட்ட இலகுவான சூழலில் உங்கள் ஆங்கிலப்புலமையை வளர்த்துக்கொள்ள

Diploma in spoken English
@
K-AIMS BUSINESS SCHOOL

June மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T.P - 076 826 8211 / 076 826 8206

No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna

K-AIMS BUSINESS SCHOOL

ACCA

விண்ணப்பம் கோரல்

ACCA
(Association of Chartered Certified Accountant)
June மாத புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T.P - 076 826 8208 / 076 826 8206

No 59 , Point pedro road, Ariyakulam , Jaffna

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.